[2018 மே 30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மதுரை வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அருமை அண்ணன் திரு. இராஜன் செல்லப்பா அவர்களின் கோரிக்கையின்படி, 100 கோடி ரூபாய் செலவிலே மதுரை மாவட்ட பால் வளத் துறைக்கு புதிய Ice cream plant கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. ஒரு சில வழக்குகள் காரணமாக பணி தொடங்குவதில் காலதாமதமானது. தற்போது, அந்தப் பணி மீண்டும் துவக்கப்பட்டுவிட்டது. அதன்மூலம், மதுரை மாவட்ட மக்களுக்கு அனைத்து வகையான பால் உப பொருட்களும் கிடைக்கின்ற வகையிலே அனைத்து ஏற்பாடுகளும் நல்ல முறையில் செய்யப்பட்டு வருகின்றன. கூடியவிரைவில் நம்முடைய தமிழ்நாடு முதல்வர் அண்ணன் திரு. எடப்பாடி பழனிசாமி அவர்கள் தலைமையில், மிகப் பெரிய பிரம்மாண்டமான அளவில் மதுரை மாவட்டத்தில் 100 கோடி ரூபாய் செலவிலான ஐஸ்கிரீம் தொழிற்சாலை மற்றும் UHT நறுமண பால் தொழிற்சாலை தொடங்கி வைக்கப்படும் என்ற நல்ல செய்தியைச் சொல்லி, விரைவாக அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன என்ற தகவலையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 88 மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

88—

தொழிற்பேட்டை

***1191—திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

2018 மே 30]

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நினைவினை முதற்கண் போற்றி வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் எண்ண இலட்சியங்களை நிறைவாக நிறைவேற்றி வருகின்ற, எளிமையின் திருவுருவமாகத் திகழ்ந்து வருகின்ற, மாண்புமிகு அம்மா அவர்களுடைய தளபதியாகத் திகழ்ந்து வருகின்ற, மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்களை வணங்குகிறேன். பணிவின் சிகரமாய் விளங்கி வருகின்ற மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் தொகுதியில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜியகுமார் அவர்கள்.

திரு. கே.எஸ். விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நம்மிடத்திலே இல்லை என்றாலும், நம் இதயங்களிலே தெய்வமாக விளங்கிக் கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய ஆட்சியை சீரோடும், சிறப்போடும் வழிநடத்திக் கொண்டிருக்கின்ற தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் அவருக்கு உறுதுணையாக இருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதியில் உள்ள செங்கரை ஊராட்சியில் ஊரகத் தொழில் துறை சார்பில் நிலம் கையகப்படுத்தப்பட்டு, உள்கட்டமைப்புப் பணிகளெல்லாம் நடைபெற்றிருக்கின்றன. ஆனால், இதுவரை எத்தனை நிறுவனங்கள் அந்த இடத்தில் சிறு தொழில் செய்வதற்கு அனுமதி கோரியிருக்கின்றன ? அதற்காக எவ்வளவு நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய

விரும்புகிறேன். அந்தத் திட்டம் எப்போது நடைமுறைக்கு வரும் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கக்கூடிய செங்கரை கிராமத்தில் அண்மையிலே புதிய தொழிற்பேட்டை தொடங்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிற்பேட்டையில் மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகள் 95-ம், ஒதுக்கீடு செய்யப்பட்ட தொழில் மனைகள் 20-ம் இருக்கின்றன. காலியாக உள்ள தொழில் மனைகள் மொத்தம் 75 உள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 89 மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

89—

பேருந்து வசதி

***2730—திரு. எஸ். ரகுபதி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமயத்திலிருந்து சென்னைக்கு மீண்டும் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருமயத்திலிருந்து சென்னைக்கு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் தினசரி இரவு 8-00 மணிக்கு ஓர் அதிநவீன சொகுசு மிதவைப் பேருந்து இயக்கப்பட்டு வருகின்றது. இப்பேருந்து வசதியே அப்பகுதி மக்களின் பயணத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் உள்ளது என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.